Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.289/2016

**Depositions of PW- 6**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சுந்தரபாண்டியன் | Occupation | காவல் ஆய்வாளர் |
| Father's name | கார்த்திகைநாதன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது இடைக்கால் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 18.06.2015 ம் தேதி சார்பு ஆய்வாளர் கந்தசாமி அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த குற்ற எண்.106/2015 பிரிவுகள்.5 r/w 9(B)(1)(b) Indian Explosives act வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 17.20 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் அழகர்ராஜ் மற்றும் சமுத்திரக்கனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வரைபடம் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் சாந்தாலட்சுமி, ராதா, பாலகணேசன், முநிகா பால்கணேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் 18.06.2015 அன்று காவல்நிலையம் ஆஜரான 2 வது எதிரியை 18.30 மணியளவில் காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

மேற்படி குவாரியானது யாருக்கு பாத்தியப்பட்டது என்பது தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மேற்படி குவாரியானது ஆவணங்கள் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளாக கூறப்பட்டுள்ள ராமசாமிக்கு அல்லது சாமிஅண்ணனுக்கு பாத்தியப்பட்டதா என்பது குறித்த ஆவணங்கள் எதுவும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு கோப்பை சார்பு ஆய்வாளர் எந்த தேதியில் எனது விசாரணைக்காக வைத்தார் என்றால் சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 18.06.2015 அன்று மாலை 05.00 மணியளவில் எனது பார்வைக்கு வைத்தார்.

இவ்வழக்கு சம்மந்தமாக தகவல் கிடைத்த உடனேயே நான் சம்பவயிடத்திற்கு சென்று விட்டேன். அதன் பின் 05.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சார்பு ஆய்வாளர் என்னிடம் சம்பவயிடத்திற்கு மாலை சுமார் 05.30 மணியளவில் வந்து கொடுத்தார். சார்பு ஆய்வாளர் என்னிடம் சம்பவயிடத்தில் வைத்து முதல் தகவல் அறிக்கையை கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சார்பு ஆய்வாளர் பதிவு செய்யும் வழக்குகளை எந்த நேரத்திலும் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள காவல் ஆய்வாளருக்கு அதிகாரம் உண்டு. முதல் தகவல் அறிக்கையில் சம்பவயிடத்தில் வந்து என்னிடம் முதல் தகவல் அறிக்கையை கொடுத்ததாக எந்த வாசகமும் சார்பு ஆய்வாளர் குறிப்பிடப்படவில்லை என்றால் மேல் அதிகாரிக்கு முதல் தகவல் அறிக்கையில் அனுப்பியதாக மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

சார்பு ஆய்வாளர் கந்தசாமியை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் இவ்வழக்கினை மேல் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் விசாரித்திருப்பார். இவ்வழக்கின் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது அங்கு சுமார் 4, 5 நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் கையெழுத்து பெறப்பட்டது. மற்ற சாட்சிகளிடம் கையெழுத்து எதுவும் பெறப்படவில்லை. பார்வை மகஜர் மற்றும் வரைபட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெறப்படவிலலை என்றால் சரியல்ல அழகர்ராஜா மற்றும் சமுத்திரக்கனி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது வழக்கு சொத்துக்கள் அங்கு தான் இருந்தது. மேற்படி உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வெடிபொருட்கள் என்பதால் சம்பவிடத்திலேயே பத்திரமாக காவல் ஆய்வாளரின் பாதுகாப்பில் இருந்தது. மேற்படி பொருட்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. பார்வை மகஜரில் சம்பவயிடத்திலிருந்த வழக்கு சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளதா என்றால் வழக்கு சொத்துக்கள் வரைபடத்தில் அபாய குறியிட்டு காட்டப்பட்டுள்ளது. நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யாமல் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் மேற்படி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.